உ

திருச்சிற்றம்பலம்

# தைப்பூச நன்னாள்

வடலூரில் நிகழும் மாபெரும் திருவிழாதைப்பூசத் திருவிழா அவ்விழா அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் சிறப்புடையது. அதன் மகத்துவங்களை இந்த ஏடு அறிமுகப்படுத்துகின்றது.

1. பழம்பெரும் திருவிழா
2. தில்லைச் சிதம்பரத் திருவிழா
3. திருவிடை மருதூர் திருவிழா
4. பழனித்திருவிழா
5. வடலூர் திருவிழா
6. வள்ளல் சித்தி பெற்ற புதுமைத் திருவிழா

## காப்புப் பாடல்:

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ்சீர் சொலத்திகழ்வ சித்தியே!

ஆசிரியர் குழுவினர்
வள்ளலார் கொள்கை நெறி பரப்பு இயக்கம்

Scanned by CamScanner

இராமலிங்கர் துணை

## தைப்பூசம்

1) தைப்பூசம் என்றால் என்ன?
தைமாதத்தில் கொண்டாடப்படும் மாபெரும் தெய்வீகத் திருவிழா.

2) மற்ற மாதங்களில் திருவிழா உண்டா இல்லையா?
மற்ற மாதங்களிலும் திருவிழாக்கள் உண்டு.

3) தைப்பூசத் திருவிழாவிற்கு மட்டும் அப்படி என்ன சிறப்பு?
சூரியன் வடக்கு நோக்கி வரும் முதல் மாதத் திருவிழா.

4) அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?
சம்மபந்தம் உண்டு.

5) எப்படி?
தேவர்களுக்கும் நமக்கும் அது அகமகிழ்வைத் தரும் அற்புத காலமாகும்.

6) அகமகிழ்வு என்பது என்ன?
ஆன்ம மலர்ச்சி.

7) அந்த ஆன்ம மலர்ச்சி என்பது?
வடக்கு நோக்கி வரும் உத்தராயண சூரியனைக் கண்டதும் எழுச்சியும் உவகையும் அடைவதாகும்.

8) உத்தராயண சூரியன் என்பது?
உள்ளமாகிய ஞானமலையின் மீது



பொன்னிறக் கதிர்களை வீசி எழும் அருள் கதிரவன் உதயம் என்று அர்த்தம்.

9) ஓகோ?
அதனால்தான் மார்கழி தேவர்களுக்கு விடியற் காலை என்று கூறுவார்கள்.

10) அதனால் நமக்கு என்ன பயன்?
ஊக்குமும்–உணர்ச்சியும்–ஒளிமிகு உடலும் நமக்கும் பொருந்தும்.

11) உணர்ச்சி என்பது என்ன?
இரக்க உணர்ச்சிதான்.

12) இரக்கம் என்பது என்ன?
மக்களிடத்தும்–மற்ற உயிர்களிடத்தும் காட்டும் பரிவு உணர்ச்சிதான்.

13) சரிதான், பரிவு உணர்ச்சிக்குத் தை மாதம் எப்படி உதவுகிறது?
தைப்பூசத்தில் இயல்பாக எங்கும் அன்னதானம் நடைபெறும். அதன்மூலம் உதவுகிறது.

14) மற்ற மாதங்களில்?
நாம் களத்தில் குதித்து உதவும் உணர்வைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

15) உணவு அளிக்க வேண்டாமா?
உணவு அளிக்க வேண்டும்+அத்துடன் உயிர் இரக்க உணர்வும் பெறுதல் வேண்டும்.

16) உயிர் இரக்க உணர்வு இல்லாவிட்டால்?
ஒளி அல்லாத கண்கள் போல ஆகிவிடும்.

17) சரி தைப்பூசம் கொண்டாடும் இடங்கள்

எவை?
திருவிடைமருதூர்–பழனி–திருத்தில்லை–வடலூர் முதலியவை.

18) திருவிடைமருதூரில் ஏன் கொண்டாடப் பெறுகிறது?
வரகுணபாண்டியன் என்பவனுக்கு பஞ்சமா பாதகம் நீக்கித் தந்ததால் கொண்டாடப்படுகிறது.

19) பழனியில் ஏன் கொண்டாடப்படுகிறது?
இம்மை மறுமை இன்பங்களை எதிர்பார்க்காத முருகனின் ஒருமை இன்பத்திற்காகக் கொண்டாடப்பெறுகின்றது.

20) ஒருமை இன்பம் என்றால்?
அது பேரின்பமாகும்.

21) திருத்தில்லையில் ஏன் கொண்டாடப் பெறுகின்றது?
மாயையை அடக்கி வெற்றி கொண்டு ஆனந்த தாண்டவம் ஆடுவதால் பதஞ்சலிக்காகக் கொண்டாடப்படுகின்றது.

22) வடலூரில் ஏன் கொண்டாடப்படுகின்றது?
வள்ளல் மாயையை அழித்து வெற்றி கொண்டதால் கொண்டாடப்படுகின்றது.

23) அப்படிக்கொண்டாடப் பெறுகின்ற நடைமுறை?
தில்லையில் ஆனந்த நடனம் ஆடிய விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

24) வடலூரில்?



அருள் நடனம் ஆடிய விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

25) ஆனந்த நடனம் என்ன பயனை உண்டாக்கும்?
ஆருயிர்களுக்கு இன்பத்தை உண்டாக்கும்.

26) அருள் நடனம் என்ன பயனை உண்டாக்கும்?
ஆருயிர்களை ஆண்டவனாக்கித் தரும்.

27) அப்படியா? ட்டிரமெண்ட்ஸ்.
அப்படியேதான்.

28) எப்பொழுதிலிருந்து தைப்பூசம் கொண்டாடப்படுகின்றது?
சங்க காலம் முதலாக.

29) உதாரணம் சொல்லும்?
தை நீராடல்–மார்கழி நீராடல் போல் சங்ககாலத்தில் கொண்டாடப்பட்டது. அதனால் தை நிறைமதி அன்றும் தை நீராடல் நிறைவு நாள் அன்றும் அன்னப் படையல் செய்தும் வழங்கியும் கொண்டாடப்பட்டது.

30) இடைக்காலத்தில் எப்படிக் கொண்டாடினார்கள்?
மகர சங்கராந்தி என்னும் தை முதல் நாள் விழாவாகவும் தைப்பூசம் என பௌர்ணமி நாள் விழாவாகவும் கொண்டாடப்பட்டது.

31) அதைப்பற்றி யார் தெரிவித்துள்ளார்கள்?
ஏன். சம்பந்தர் அப்பர் சுந்தரரே



Scanned by CamScanner

தெரிவித்துள்ளார்கள்.

32) திருவிடை மருதூரில் முக்தி பெற்றவர் யார்?

பத்தரகிரியார்.

33) பழனியில் பயன்பெற்றது யார்?

யாராம்? போகர் தான்.

34) தில்லையில் நடனம் கண்டவர் யார்?

பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்கள்.

35)அதற்குதான் ஆனந்த நடனம் என்று பெயரா?

ஆமாம்.

36) வடலூர் தரிசனம் யார் பார்த்தது?

யார் பார்த்திருப்பார்கள்? ஐயாதான்.

37) அதற்காக என்ன செய்தார்கள்?

மனிதநேய அடிப்படையில் ஏழைகளுக்கு அன்னச்சாலையை உண்டாக்கினார்கள். அதுபோலவே தான் பெற்ற பாக்கியத்தை உலகம் அறிந்து உய்ய ஆன்மநேய அடிப்படையில் சத்தியஞானசபையை உண்டாக்கினார்கள்.

38) சத்தியஞான சபையில் நடைபெறும் திருவிழாக்கள் எத்தனை?

ஒரே திருவிழாதான். அதன் கிளையாக மாதப்பூச விழாக்கள் 13.

39) அது என்ன திருவிழா?

அதுதான் தைப்பூசத் திருவிழா.

40) அதுதான் பிற இடங்களிலும் கொண்டாடி வருகிறார்களே?

வடலூர் தைப்பூசம் அவைகளில் வேறுபட்டது.



வெளி நாட்டவரும் வந்து வணங்குவது.

41) எப்படி?

தேவர்கள் – மூவர்கள் – ஐவர்கள் – நவநிலைத்தலைவர்கள் ஆகிய மேலோரும் அதற்கு மேரேலாரும் வந்து நின்று பணிந்து வழிபடுவதுதான் வடலூர் தைப்பூசம்.

42) ஏன்?

எல்லாரையும் முழுமுதல் தெய்வமாக்கித் தரும் சக்தியால்.

43) ஏ! சாமி!! அந்தத் தைப்பூசம் பற்றி ஐயா சொன்னது என்ன?

அது ஞானநிறைவைக் குறிக்கும் திருவிழா என்றார்கள்.

44) எங்குச் சொல்லியுள்ளார்கள்?

திருவருட்பா–வசனபாகத்தில்– சுப்பிரமணியம் என்ற தலைப்பில் சொல்லியுள்ளார்கள்.

45) ஞானநிறைவு என்றால் என்ன?

ஞானநிறைவு என்பது அனுபவ அறிவின் நிறைவாகும்.

46) அனுபவ அறிவு என்பது என்ன?

பதிஅறிவு.

47) பதிஅறிவு என்றால் என்ன?

கடவுள் அறிவு.

48) கடவுள் அறிவு அனுபவமாகி பூர்த்தியானால் என்ன லாபம்?

என்னலாபமா? மாயை சிண்டைத்தட்டிக்



Scanned by CamScanner

கொண்டு ஓடிவிடும்.

49) அப்படி என்றால்?

பின்னங்கால் பிடரியில் இடிக்கச் சிட்டாய்ப் பறந்துவிடும்.

50) அப்போது அந்த பரிபூரண மாயா வெற்றிதான்?

ஞானநிறைவு எனப்படும்.

51) அதை வள்ளல் பெற்றுவிட்டார்களா?

பெறாமல் அவர்களுக்கு என்ன வேலை?

"துன்று—மல வெம்மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் சுகம் என்று வருமோ" என்றல்லவா ஏங்கியிருக்கிறார்கள்.

52) அந்த ஏக்கத்தை ஆண்டவன் தொலைத்து விட்டானா எப்படி.

ஆம் வள்ளலை அருட்பெருஞ்ஜோதியாக்கித் தொலைத்துவிட்டான்.

53) எக்ஜாம்பிள் சொல்லலாமா?

ஓ! சொல்லலாமே!

54) எங்கே சொல்லும்? கேட்போம்!

"அருட்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு! மருட்சார்பு தீர்ந்தேன் என்று அறையப்பாமுரசு" என்பதால் அறியலாம்.(திருவருட்பா ஆறாவது திருமுறை)

55) மருட்சார்பு என்றால் என்ன?

அதுதான் மாயையின் ஆதிக்கம்.

56) மாயையின் சர்வாதிகாரம் அனைத்தையும்



ஒழித்த நபர்?

வள்ளல் ஒருவர்தான் மற்றவர்கள் மூன்று மல வெற்றி மட்டும் கண்டவர்கள்.

57) ஒழிக்கும் நாள்?

தைப்பூசந்தான்.

58) ஐயா?

ஐந்து மல வெற்றிகண்டவர்கள், அண்டகோடிகளிலேயே முதல் நம்பர் மாவீரர்.

59)ஐந்து மலங்கள் யாவை?

ஆணவம்—கன்மம்—மாயை—திரோதானம்—மகாமாயை ஆகியவை.

60) சரி! வடலூரில் தைப்பூசம் எப்படிக் கொண்டாடுவார்கள்?

சன்மார்க்க கொடியேற்றவிழா— பிரார்த்தனை விழா—பஜனைவிழா—அகிம்சை விழா—அன்னதானவிழா—ஜோதிதரிசன விழா—மேட்டுக்குப்பம் சித்திவளாக அறைதரிசன விழா—இப்படியாகக் கொண்டாடுவார்கள்.

61) ஜோதி தரிசனம் எப்பொழுது நடக்கும்?

தைப்பூசத் திருநாள் அன்று 6முறை நடக்கும்.

62) ஆறுமுறையா?

ஆம்.

63)அது எதற்கு?

ஒவ்வொரு நாளும் நாம் எத்தனை வேளை உண்கிறோம்.



Scanned by CamScanner

64) மூன்று வேளை.

அதுபோலவே 6வேளை கடவுளை வழிபடப்பழகுவதற்காக.

65) அந்த ஆறு வேளைகள் என்னென்ன?

காலை–முற்பகல்–நண்பகல்–மாலை–இரவு–விடியற்காலம் முதலியவை.

66) அதுபோல வழிபட்டால் என்ன பயன்?

நமது ஆன்மா இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரும்.

67) ஆன்மா எந்த இருட்டறையில் உள்ளது?

மாயை சூழ்ந்த உள்ளமாய இருட்டறையில் உள்ளது.

68) சரி! நாமும் மாயையை வெல்ல முடியுமா?

முடியுமே.

69) மாட்டிக்கொண்டல்லவா விழிக்கிறோம்?

மாட்டாமல் இருக்க ஒரு வழி இருக்கிறது.

70) அது என்ன வழி?

அதுதான் ஆன்மா உருகும் வழி. நெகிழும் வழி.

71) ஆன்மா எப்படி உருகும்?

வெண்ணெய்போல் உருகும்.

72) வெண்ணெய் என்பது?

தயிரிலிருந்து கடைந்து எடுக்கப்பட்ட நவநீதம்.

73) கடைவது என்பது என்ன?

கசிவது–கனிவது–நெகிழ்வது–உருகுவது–பரிவது–பச்சாதாபப்படுவது.அழுதால் அழுது உதவி அளிப்பது–கண்ணீர் வடித்தால் இரத்தம் வடித்து இதம் செய்வது. இதுவே கடைவது.



74) அப்படி நம்மால் நடக்க முடியுமா?

ஐயா அப்படி நடந்து கொண்டவர்கள் தானே!

75) ஐயாவுக்கு என்ன? ஆண்டவன் கருணை கிடைத்தது.

தயவுகாட்டுவதற்கு ஆண்டவன் உதவி தேவையில்லை.

76) ஏன்?

தயவு என்பது நாமே (தனி ஒருவர்) சம்பாதித்துச் சேர்க்கும் லாபமாகும்.

77) அதற்கு ஒரு உதாரணம்?

சைவ உணவையே பழக்கமாக்கிக் கொள்வது.

78) சரிதான் அந்த வடலூர் ஜோதி தரிசனம் எப்படி நடைபெறுகிறது?

வடலூர் சத்தியஞான சபைக்குள் ஏழு திரைக்குள் நடைபெறுகிறது.

79) ஏழு திரைகள் எதற்கு?

அதுதான் மாயையின் கட்டுகள்–மாயையின் முடிச்சுகள்–அந்த ஏழு கட்டுகளை அவிழ்த்து விட்டால் ஆன்மா ஜொலிக்கும் ஒளி வீசும்.

80) அதுதான் ஜோதிதரிசனமா?

அது ஜோதி தரிசனத்தின் ஆரம்பநிலை.

81) பின் எது முழு ஜோதிதரிசனம்?

ஆன்மாவுக்குள் அருட்பெருஞ்ஜோதி தொடர்ந்து நடனம் இடுவதுதான்.

82) அது எப்போது நடைபெறும்?



Scanned by CamScanner

ஏழு திரைகள் நீங்கினால் நடக்கும்.

83) ஏழு திரைகள் என்பது என்ன?

அசுத்தமாயை அசுத்தமும் சுத்தமும் கலந்த மாயை சுத்தமாயை ஆகிய இவைகளே ஏழு வர்ணத்திரைகள்.

84) அதற்குச் சத்தியஞான சபையில் உள்ள அடையாளம் என்ன?

திரைகள்தான் மாயை தூய திருநிலைக் கண்ணாடிதான் ஆன்மா ஒளிரும் அகண்டந்தான் ஆண்டவர்.

87) அந்த ஆன்மா ஜொலிப்பது எப்படி?

தயவுடன் இருந்தால் ஆன்மா ஜொலிக்கும். அந்தத் தயவே பூரணமானால் அதனுள் ஆண்டவர் ஜொலிப்பார்.

88) அம்மாடி! அம்மாடி!! அதனை நாம் அடைய முடியுமா?

அணு அளவு தயவு நம்மிடம் இருந்தால்போதும் மலை அளவாகக் கடவுள் நம்மிடம் அகப்பட்டுக்கொள்வார்.

89) உண்மையாகவா?

பொய் சொல்வதால் எனக்கு என்ன லாபம் அதனால் எவ்வளவு வரப்போகிறது.

90) ஒன்றுமில்லைதான்!

அதனால் நாம் தயவும் தாட்சயணியும் அடைய முயல்வோம்.



91) அப்ப தயவு விழா தைப்பூச விழா! அப்படி தானே?

எஸ் எஸ் அருமையாகப் புரிந்து கொண்டீரே!!

92) திருஅறை தரிசனம் என்றால் என்ன?

வடலூரில் தைப்பூசத் தயவு விழாச் சிறப்புடன் நடைபெற்றதை அன்பர்கள் நமது சன்மார்க்கத் தலைருக்கு மேட்டுக்குப்பம் சென்று பணிவுடன் தெரிவிப்பது.

93) அது வடலூரிலேயே நடந்தால் என்ன?

வடலூர் உத்தரஞான சிதம்பரம்.

94) மேட்டுக்குப்பம்?

உத்தர உத்தர (உத்தரோத்தர்) ஞான சிதம்பரம்.

95) அங்கு ஐயா பெற்றபாக்கியங்கள்?

ஆண்டவருக்கு அருட்பட்டம் வகிக்கும் பிள்ளை ஆனது.

96) அப்பறம்?

ஆண்டவரது அருட்சத்தியைத் திருமணம் செய்தது.

97) அப்பறம்?

அண்டகோடிகள் மற்றும் ஆன்மாகோடிகளின் ஆட்சியைத்தான் ஏற்றுக்கொண்டது.

98) மேற்கொண்டு?

அதற்கான அடையாளமாகச் சன்மார்க்க கொடி கட்டிக்கொண்டது. சத்தியஞான தீபம் வைத்தது.

99) அத்துடன்?



Scanned by CamScanner

வள்ளல் சுத்த பிரணவ ஞான தேகியாகி ஜொலித்தது.

100) அதற்கு மேல்?

ஆண்டவர் வேலைகள் ஐயா வேலைகளாகிவிட்டன.

101) அதனால் என்ன பயன்?

ஆன்மநேயப் பரிணாமத்தை அனைத்துயிர்களும் அடையச் செய்வதுதான்.

102) அது என்ன கண்ணாமூச்சி விளையாடுவதா?

அது அருட்சத்தியுடன் பந்து விளையாடுவது.

103) பந்து விளையாடுவது அங்கேயும் உண்டோ?

திருவருட்பாவில் "ஆடேடிபந்து" என்னும் கீர்த்தனை தலைப்பினை விவரமாக வாசித்துப்பாரும்.

104) அதில் அப்படி என்ன சொல்லியிருக்கிறது?

ஆச்சரியம்! அதிசயம்!! அற்புதம்!!! சொல்லப்பட்டுள்ளது.

அவசியம் இன்றைக்கே படிக்கிறேன்.

105) சரி வள்ளல் அருள் ஆட்சியில் அமர்ந்து என்னதான் செய்கிறார்?

மாயையின் வேரில் வெந்நீர் ஊற்றுகிறார்கள். வெந்நீர் ஊற்றி அதன் வேலைக்கு வேட்டு வைக்கிறார்கள்.



106) வேலைக்கு வேட்டு வைத்தபின்?

மக்களை வானவர் ஆக்குகிறார்கள்.

107) விலங்குகளை?

சாதுவான விலங்குகளாகச் சைவ விலங்குகளாக ஆக்குகிறார்கள்.

108) பாதகர்கள் இருக்கிறார்களே! அவர்களை என்ன செய்வார்கள்?

அவர்களுக்குத்தான் வள்ளல் அள்ளிக் கொடுக்கிறார்கள்.

109) ஏன் அப்படித் தருகிறார்?

பெரியோர்களுக்கு எல்லாம் கிடைத்து விடும்.

110) பஞ்சமகா பாதகர்களுக்கு?

ஏதும் கிடைக்காது.

111) அதற்கு?

பாடுபடவே அருளாட்சியைப் பெற்றுள்ளார்கள் ஐயா. அதற்கு அடையாளம் தான் தைப்பூசத் திருவிழா.

112) எப்படி?

தைப்பூசத் திருவிழாவைத் தரிசித்தால் பழி பாவம் பாதகமெல்லாம் பறந்து போகும். புண்ணியம், புகழ், பொலிவு எல்லாம் பறந்து வரும்.

113) அந்த ஜோதி அகத்தில் ஒளிருமா?

அதை ஒளிரச் செய்வதுதான் அருளாட்சி பிரஜையின் மகத்தான கடமை. அதுவே நமது மன்னவரின் சாம்ராஜ்ஜிய முதல் சட்டம்.

114) எப்படி அது ஒளிரும்?



Scanned by CamScanner

தீபமாக–சந்திரனாக–சூரியனாக–ஒளிப்பிழம்பாக–அளவிட முடியாத அருட்பெருஞ்ஜோதியாக ஒளிரும்.

115) எங்கே அப்படி நடக்கும்?

உயிரில் உள்ளத்தில் மனதில் உடலில் நடக்கும்.

116) உடல் கூடவா ஒளிமயமாகும்?

அதுதான் ஐயாவின் தைப்பூச அருட்பிரசாதம்.

117) இராமலிங்கமே! இராமலிங்கமே! அது என்றைக்கு நமக்குக் கிடைக்கும்?

அது இன்றைக்கே கிடைக்கும் இரக்கம் இருந்தால்.

118) அப்ப அந்த ஜோதி தரிசனத்தைப் பார்த்துவிட்டுதான் எனக்கு மறுவேலை.

அப்படியானால் ஜோதி தரிசன நேரம் வரப்போகிறது புறப்படும்.

119) நீரும் என்னுடன் வாரும்.

இதோ!.

திருச்சிற்றம்பலம்

K.S பிரிண்டர்ஸ்,
வடலூர். செல்: 9443576739

Scanned by CamScanner